# சென்னை மியாட்: உறுப்பு மாற்றல் துறை துவக்கம்

■ சென்னை

சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் ஈரல்-கணையம்-பித்தப்பை அறுவை சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்றல் துறை தொடக்கவிழா சனிக்கிழமை மாலை நடந்தது. விழாவுக்கு மருத்துவமனை நிறுவனரும் நிர்வாக இயக்குநருமான பி.வி.ஏ. மோகன்தாஸ் தலைமை தாங்கினார். மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இணை இயக்குநர் பிருத்வி மோகன்தாஸ் முன்னிலை வகித்தனர்.

இந்து குழும சேர்மன் என்.ராம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, இந்த துறையை தொடங்கி வைத்தார். இந்த துறைக்கான தீவிர சிகிச்சைப் பிரிவை மரியம் ராம் தொடங்கி வைத்தார்.

விழாவில் பேசிய என்.ராம், "கடுமையான உழைப்புக்குப் பிறகு மியாட் மருத்துவமனை வளர்ச்சி அடைந்துள்ளது. மியாட் மருத்துவமனைக்கும் எனக்கும் ஆரம்பத்தில் இருந்தே நல்ல உறவு இருந்துவருகிறது" என்றார்.

மியாட் மருத்துவமனை மருத்துவ இயக்குநர் டாக்டர் ஜார்ஜ் எம்.சாண்டி உள்ளிட்ட டாக்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.